விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 211 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 01 புதன்கிழமை (17.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## மருத்துவர் அர்ச்சுனா மீது ஐந்து வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றம் பிணையில் விடுவிப்பு



- முகநூல் நேரலைக்குத் தடை விதிப்பு
- வைத்தியர்கள் தொடர்பான குற்றச்சாட்டை ஆதாரத்துடன் பொலிஸில் முறையிட உத்தரவு
- சாவகச்சேரி வைத்தியசாலைக்குள் நுழையவும் தடை

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு தடைகள் இல்லை

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்



- இம்மாத இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்படும்.
- 1 கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதி.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசியலமைப்பின் - ஏற்பாடுகள் மற்றும் 15

## —மின் கட்டணம்— மேலும் குறையும்

### அமைச்சர் கஞ்சன



(கொழும்பு)

இன்னும் 3 வருடங்களில் மின்சாரக் கட்டணம் மேலும் குறைக்கப்படும் என மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் 15

## அடுத்த மாதம் முதல் இலத்திரனியல் அடையாள அட்டை

(கொழும்பு)

அடுத்த மாதம் முதல் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை அறிமுகப்படுத்தவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் மோசடிகள், இலத்திரனியல் அடையாள அட்டை அறிமுகத் 15

## பூநகரி – பரந்தன் வீதியில் டிப்பர் வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் காயம்



15

## யுனஸ்கோ நிறுவனப் பணிப்பாளர் ஜனாதிபதி ரணிலுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள யுனெஸ்கோ நிறுவனப் பணிப்பாளர் நாயகம் ஒட்ரே அசோலே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளார்.

கொழும்புக் கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இந்தச் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. 02



## ஒலிம்பிக் தீபத்தை ஏந்திய ஈழத் தமிழன்



09

## வரிகளை அறவிடுவது தொடர்பில் கவனம்

### இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்



(கொழும்பு)

புதிய வரிகளை விதிக்கும் முன்னர், வரி ஏய்ப்புச் செய்த மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரிகளை அறவிடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் 15

## வேலையில்லாப் பட்டதாரிகள் யாழில் கவனயீர்ப்புப் போராட்டம்



06

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் கே.வி.குணசேகரம் காலமானார்



(கோப்பாய்)

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் அதிராகவும் நல்லூர் கோட்டக் கல்வி பணிப்பாளராகவும் இருந்து ஓய்வு பெற்ற எழுத்தாளர் கலாபூஷணம் கே.வி.குணசேகரம் நேற்று முன்தினம் காலமானார்.

அவருக்கு (வயது 74). சிறுகதைகள், நாவல்கள், திருக்குறள் கதைகள் உட்பட பல நூல்களை எழுதிய கே.வி. குணசேகரம் பல்வேறு இலக்கிய விருதுகளையும் பெற்றவர்.

அவரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 11.00 மணியளவில் கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும். (ம)

# யாழ்.போதனாவுக்கு 35 மில்லியன் பெறுமதியான கருவள ஸ்கானர் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சுமார் 35 மில்லியன் பெறுமதியான கருவள சிகிச்சைக்கான ஸ்கானர் இன்று அன்பளிப்பு செய்யப்படவுள்ளது.

இக்கருவி இன்று மாலை 3.00மணிக்கு கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களால் கையளிக்கப்படவுள்ளது.


லண்டன் அபயம் அறக்கட்டளையிடம் ஆறு திருமுருகன் விடுத்த வேண்டுதலால் இக் கருவி கிடைத்துள்ளது. இக் கருவிக்கான முழுச்செலவையும் சதா.மங்களேஸ்வரன் சகோதரர்கள் அபயம் ஊடாக வழங்கியுள்ளனர். மங்களேஸ்வரன் யாழ் இந்துக் கல்லூரியில் ஆறு.திருமுருகன் அவர்களோடு கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# யுனெஸ்கோ...

யுனெஸ்கோவில் இலங்கை உறுப்புரிமை பெற்று 75வது ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு யுனெஸ்கோ நிறுவன பணிப்பாளர் நாயகம் ஒட்ரே அசோலே இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

# நினைவஞ்சலி நிகழ்வு

கடந்த 2024.06.25
செவ்வாய்க்கிழமையன்று இறைபதம்
அடைந்த எமது கல்லூரியின்
முன்னாள் அதிபர்



**அமரர்**
**திரு. பொ.கமலநாதன்**

அவர்களது நினைவஞ்சலி நிகழ்வு.
எதிர்வரும் 2024.07.22
திங்கட்கிழமை காலை 7.30
மணிக்கு பாடசாலையில்
நடைபெறவுள்ளது. மேற்படி
நிகழ்விலே கலந்துகொள்ளுமாறு
அனைவரையும் கேட்டுக்
கொள்கின்றேன்.

**அதிபர்**
**யா/யூனியன் கல்லூரி**

(C-812)

# 41 ஆம் நாள் நினைவுதின அழைப்பு




"உயிரோடு இருக்கும் போது என்னிடம் நம்பிக்கை
கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்.."
(யோவான் 11:26)

கடந்த 09.06.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர்**
**ஜோன்பப்ரிஸ் சூசையம்மா**

அவர்களின் 41 ஆம் நாள் நினைவுதினம்
18.07.2024 நாளை வியாழக்கிழமை
புனித திரேசாள் ஆலயத்தில் காலை 10.00
மணியளவில் விண்ணேற்புத் திருப்பலி
ஒப்புக்கொடுக்கப்பட்டு. தொடர்ந்து அன்னாரின்
இல்லத்தில் நடைபெறும் மதியபோசன
நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

(C-810)

**இல.537, பாடசாலை பின் வீதி,**
**ஆனந்தபுரம், கிளிநொச்சி.** **077 83 79 685/ 077 57 12 883** **தகவல் குடும்பத்தினர்**

# பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டு. கிழக்கு, சித்தன்கேணி எனும் முகவரியை உடைய **நவரத்தினராசா பதிமாதேவி** ஆகிய நான் 17.07.2024 இன்றிலிருந்து எனது பெயரை **நவரத்தினராசா பத்மாதேவி** எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன். எனவே இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் **பத்மாதேவி** எனும் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

**இங்ஙனம், உண்மையுள்ள**
நவரத்தினராசா பத்மாதேவி

(1492)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : மானிப்பாய் கிராம உப அலுவலகம்**
**விண்ணப்பதாரரின் பெயர் : கதிரேசு திருநாவுக்கரசு**
**ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : உரிமையாளர்**

**ஆதன இல -100** **வீதி - பிப்பிலி வீதி,** **வட்டாரம் - 09**

வட்டாரம் 09 பிப்பிலி வீதி, ஆதன இலக்கம் 100 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் நவாலி இறைமாணாக்கை எனும் பெயருள்ள நிலப்பரப்பு 23 குளி 15.61 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு **இ.வசந்தசேனன்** அவர்களால் எழுதப்பட்ட 12513 ஆம் இலக்க 2020.11.10 ஆம் திகதிய உறுதி மூலம் ஜோன் அர்ச்சுனன் குலநாயகம் மற்றும் ஏஞ்சலா ரோகினி குலநாயகம் என்பவர்களால் இவ் ஆதனத்தின் உரிமையாளர்கள் தாமே என வெளிப்படுத்தல் செய்யப்பட்டு பின்னர் பிரசித்த நொத்தாரிசு **இ.வசந்தசேனன்** அவர்களால் எழுதப்பட்ட 12518 ஆம் இலக்க 2020.11.16 ஆம் திகதிய உறுதி மூலம் **கதிரேசு திருநாவுக்கரசு** என்பவருக்கு நிலப்பரப்பு 09 அறுதி விற்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் **S.பாலேந்திரன்** அவர்களால் வரையப்பட்ட **2020/077/2** ஆம் இலக்க 2002.11.20 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 09 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு,


வடக்கு - **மீதி ஆதனம்**
கிழக்கு - **பிப்பிலி வீதி**
தெற்கு - **ஒழுங்கை**
மேற்கு - **சந்திரகுமாரினதும் திருநாவுக்கரசினதும் ஆதனம்**

மேற்குறித்த ஆதனத்தை கதிரேசு திருநாவுக்கரசு என்ற பெயரில் சபையின் ஆதன பதிவேடுகளில் ஆதனஉரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனஉரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 - 03 - 1929 | 15 - 07 - 2024 |



# கந்தையா குமாரசுவாமி

*யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி மற்றும் நல்லூர் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குமாரசுவாமி அவர்கள் 15.07.2024 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.*

*அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்ற நல்லம்மா (இளைப்பாறிய ஆசிரியை - உடுப்பிட்டி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சண்முகநாதன், மீனாட்சி, ஆறுமுகம் ஆகியோரின் அன்புத் தம்பியும் உமாபாலன் (பிரித்தானியா), புவனேஸ்வரி(பிரித்தானியா), Dr.தயாளினி(யாழ். போதனா வைத்தியசாலை), சங்கர் (பிரித்தானியா), Dr.திருமால்(கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உமாதேவி (பிரித்தானியா), அசோகன் (பிரித்தானியா), Dr.சிவதாசன் (தெல்லிப்பழை வைத்தியசாலை), Dr.சுலோஜனா(பிரித்தானியா), Dr.சுதர்சினி(லேடி றிச்வே வைத்தியசாலை - கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிருந்தன், லக்ஷ்மன், சிந்திவைதேகி, ஹரிகஜன், அரன்செந்தூரன், தேவசாயினி, தர்மதாசன், தர்மசாயினி, பிரணவி, சங்கவி, நேகா, ஜித்தியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (18.07.2024) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பி.ப 1.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**இல.33, செட்டித்தெரு**
**ஒழுங்கை, நல்லூர்,** **077 820 8884** *தகவல்:*
**யாழ்ப்பாணம்.** **077 739 8612** (1495) **குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தக் குற்றச்சாட்டுகள் மிகைப்படுத்தப்பட்டதாம்

## சரத் பொன்சேகா விளக்கம்

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தின்போது யுத்தக்குற்றங்கள் இழைக்கப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை மிகைப்படுத்தப்பட்டவை என சரத்பொன்சேகா நிராகரித்துள்ளார்.**



40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றால் அவர்களின் மனித எச்சங்கள் எலும்புக்கூடுகள் எங்கே எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் இறுதியுத்தத்தின்போது உயிர்தப்பினார்கள் அவர்களை நான் பாதுகாப்பாக வெளியேற்றினேன். முதலில் 2009 மே 19ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் இருந்து 150,000 பேரை மீட்டேன். யுத்தம் முடிவடைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் 85,000 பேரை மீட்டேன் என தெரிவித்துள்ள சரத்பொன்சேகா, நாங்கள் பொதுமக்களின் உயிரிழப்புகள் அதிகரிப்பதை தவிர்த்தோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் கனரக ஆயுதங்களை ஆட்டிலறிகள் போன்றவற்றை மிகவும் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தினோம். குறிப்பாக 2009ஆம் ஆண்டின் ஐந்து மாதங்களில் அவ்வாறே போரிட்டோம் எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கண்மூடித்தனமாக பொதுமக்கள் உட்பட அனைவரின் மீதும் தாக்குதலை மேற்கொண்டிருந்தால் ஒருமாதத்திற்குள் யுத்தத்தை முடித்திருக்கலாம். ஆனால் நாங்கள் அதனைச் செய்யவில்லை.நாங்கள் கட்டுப்பாட்டுடன் தாக்குதலை மேற்கொண்டோம்.

நிச்சயமாக இந்த உயிரிழப்புகள் குறித்த புள்ளி விபரங்கள் யுத்த குற்றச்சாட்டுகள் மிகைப்படுத்தப்பட்டவை என தெரிவித்துள்ள அவர் இந்த தகவல்கள் உண்மையென்றால் நீங்கள் அந்த பகுதியில் எங்கு சென்றாலும் மனிதப் புதை குழிகளை பார்க்க கூடியதாயிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறான ஒரு சூழ்நிலை இல்லை.

இராணுவத்தில் உள்ள சிலர் குற்றங்களில் ஈடுபட்டிருக்கலாம்.

அதை என்னால் நிராகரிக்க முடியாது. நான் இது குறித்து பாராளுமன்றத்திலும் பேசியுள்ளேன் என அவர் தெரிவித்தார். (நி-6)

# உணவுப் பொருட்களின் விலைகள் மீண்டும் குறைப்பு

(கொழும்பு)

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் உறுதியளித்தபடி உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சோறு, கறி மற்றும் கொத்து ஆகியவற்றின் விலை குறைக்கப்படும் என சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஒரு கப் சாதாரண தேநீருக்கான விலையும் குறைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிய விலைகள் பின்பற்றப்படாவிடில் அல்லது காட்சிப்படுத்தப்படாவிட்டால் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யுமாறு சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் கீரி சம்பா அரிசி, சம்பா அரிசி, முட்டை மற்றும் கோழிக்கறி ஆகியவற்றின் விலைக் கட்டுப்பாட்டை அமுல்படுத்துமாறு சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

அரசு அவ்வாறு செய்தால், நுகர்வோருக்கு கூடுதலாக 25 சதவீதம் விலை குறைப்பு வழங்கப்படும் என சங்கம் உறுதியளித்துள்ளது. (நி-6)

# அடுத்த வாரம் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை

## இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

ஆசிரியர்களின் வேதனப் பிரச்சினையை முன்னிறுத்தி அடுத்த வாரம் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அந்தச் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அதேவேளை தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை தங்களது போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# புதிய வாக்காளர்களாக 76,000 பேர் தகுதி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு சுமார் 76 ஆயிரம் பேர் புதிய வாக்காளர்களாகத் தகுதி பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர்களில் கடந்த மே மாதம் 31ஆம் திகதி வரையில் 18 வயதைப் பூர்த்தி செய்த புதிய வாக்காளர்களும் அடங்குகின்றனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காகச் சுமார் ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரம் பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# பதவி துறக்கும் வாசு



(கொழும்பு)

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைமைப் பதவியிலிருந்து வாசுதேவ நாணயக்கார தற்காலிகமாக விலகுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நோய்வாய்ப்பட்டுள்ள காரணத்தினால் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு தற்காலிகமாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிரோசன் பிரேமரட்ன நியமிக்கப்பட உள்ளார். (நி-6)

# யுனெஸ்கோ பணிப்பாளர் இலங்கைக்கு

(கொழும்பு)

யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் ஓட்ரி அசோலே இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு நாட்டிற்கு வருகைதந்துள்ளார்.

அதன் படி அவர் கட்டார் எயார்வேஸ் விமானமான KR – 662 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இலங்கை, யுனெஸ்கோவில் அங்கத்துவம் பெற்று 75 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு அவர் வருகை தந்துள்ளதுடன் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரையில் இடம்பெறும் நிகழ்வுகளில் அவர் பங்கேற்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)


12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.ஜெயம் சரஸ்வதி

பிறப்பு 16.01.1954

இறப்பு 29.07.2012



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்ப விளக்கே!
இன்றும் உங்கள் வழிகாட்டலே
இவ்வுலகில் எம்மை
வாழ வைக்கின்றது
விண்ணிலிருந்து எமக்கு
வழிகாட்டுவீர்கள் என்ற
நம்பிக்கையுடன் நாம்

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

(165)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியனான கொற்றாவத்தை



வடமராட்சி லீக் அனுமதியுடன் கரவெட்டி நவசக்தி விளையாட்டு கழகம் வடமராட்சி அணிகளுக்கு இடையே நடத்திய கால்பந்தாட்ட போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நவசக்தி விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது.

14ஆவது நிமிடத்தில் றேஞ்சஸ் அணியின் சுஜாஸ்கான் நீண்ட தூரத்தில் இருந்து தனது அணிக்கான முதலாவது கோலை பதிவு செய்தார். முதலாவது கோல் பெறப்பட்ட சில நிமிடங்களிலேயே முதல்பாதியாட்டம் முடிவுக்கு வர 1:00 என்ற கோல் கணக்கில் றேஞ்சஸ் அணி முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியாட்ட ஆரம்பத்தில் இரு அணிகளும் சிறப்பான பந்து பரிமாற்றங்கள் மூலம் எதிரணியின் கோல் பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். ஆனாலும் பின்கள வீரர்களின் சிறப்பான தடுப்பாட்டத்தால் கோல் பெறும் வாய்ப்புக்கள் தடுக்கப்பட்டன. ஆட்டம் இறுதிக்கட்டத்தை எட்டவே இரு அணிகளும் கோல் பெற வேண்டும் என ஆடினர். அதன் பயனாக ஆட்டத்தின் 38ஆவது மற்றும் 40 ஆவது நிமிடத்தில் றேஞ்சஸ் அணியின் ஆர்த்திகன் தனது அணிக்காக நீண்ட தூரத்தில் இருந்து இரட்டை கோலினை பெற்றுக்கொடுக்க 03:00 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். போட்டியின் ஆட்டநாயகனாக றேஞ்சஸ் அணியின் முன்கள வீரன் ஆர்த்திகன் தொடராட்ட நாயகனாக றேஞ்சஸ் அணியின் முன்கள வீரன் சுஜாஸ்கான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (றி-6-90)

# சம்மட்டி எறிதலில் இரு பதக்கங்கள்





அகில இலங்கை தேசிய மட்ட கனிஷ்ட பிரிவினருக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.சுபீஸ்கரன் வெள்ளிப் பதக்கமும் நெல்லியடி மத்திய கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த ஜெ. விஸ்ணுப்பிரியன் வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

அகில இலங்கை தேசிய மட்ட கனிஷ்ட பிரிவினருக்கான தடகள போட்டிகள் தியகம மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.சுபீஸ்கரன் வெள்ளிப் பதக்கத்தையும்,இதில் 20 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.விஸ்ணுபிரியன் 31.42 மீற்றர் தூரம் எறிந்து வெண்கல பதக்கத்தை கைப்பற்றியுள்ளனர். (றி-6-90)

# வேக நடை போட்டியில் யாழிற்கு 2 பதக்கங்கள்



அகில இலங்கை தேசிய மட்ட கனிஷ்ட பிரிவினருக்கான வேக நடைப் போட்டியில் யாழ் மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தைப் பிரதி நிதித்துவம் செய்த இரு வீராங்கனைகள் வெள்ளிப் பதக்கத்தையும், வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

அகில இலங்கை தேசிய மட்ட கனிஷ்ட பிரிவினருக்கான தடகள போட்டி தியகம மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் வேகநடைப் போட்டியில் யாழ் மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தைப் பிரதி நிதித்துவம் செய்த ராஜ்குமார் டனுசியா வெள்ளிப் பதக்கத்தையும், 23 வயதிற்கு உட்பட்ட பெண் களுக்கான வேகநடைப் போட்டியில் யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ராஜ்குமார் கௌசியா வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (றி-6-90)

# மரண அறிவித்தல்

பிறப்பு 11 - 11 - 1935



இறப்பு 16 - 07 - 2024

## ஆ.கு.சுப்பிரமணியம்

(இளைப்பாறிய இ.மி.ச ஊழியர்)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் திக்கம், அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆ.கு.சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (16.07.2024) காலமானார்.

அன்னார் இந்திரபூபதியின் அன்புக் கணவரும் குட்டித்தம்பி - மாணிக்கம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் கணபதிப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (17.07.2024) காலை 9.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் திக்கம் இந்த மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

தென்னமரவடி,
அல்வாய் மேற்கு, அல்வாய். (167)
தொ.பே : 021 226 2209, 076 535 1027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்கேள்வி அறிவித்தல்

## இலங்கை சனநாயக சோலிசக் குடியரசு
## சாவகச்சேரி பிரதேச சபை, வடமாகணம்.

Supply of 900 Nos of LED Bulb (30W) and
200 Nos of Light Control Sensor for street Lamp

1. கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள LED Bulb (30W) மற்றும் Light Control Sensor for Street Lamp விநியோகிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைகுறி பொறிக்கப்பட்ட கேள்விகளை சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம், வடமாகாணம் சார்பில் உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு தலைவர் கோருகின்றார்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் (தொலைபேசி : 021 205 0348, 021 205 0356 தொலைநகல் : 021205 0348) எனும் முகவரியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய அலுவலகத்தில் 2024.07.17 தொடக்கம் 2024.08.05 வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 09.00 மணி முதல் 15.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம். இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதி சேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ், சமாப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரர் மாத்திரமே வரிக் கொடுப்பனவைக் கோரமுடியும். அத்துடன் Manufacture's Authorization சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் எனும் முகவரியில் 2024.07.17 ஆம் திகதியிலிருந்து 2024.08.05 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கமுடியாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் எனும் முகவரிக்கு 2024.08.06 ஆம் திகதி மதியம் 2.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
8. சாவகச்சேரி பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் 2024.07.31 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அவர்களின் சொந்த செலவிலேயே விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம்.
9. கேள்வி ஆவணம் செல்லுபடியாகும் காலம் கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிந்து 49 நாட்கள் வரை ஆகும். அத்துடன் கேள்விப் பிணை வைப்பானது நிபந்தனையற்றதும் தேவைக்கேற்ப வங்கி உத்தரவாதமாகக் காணப்படுவதுடன் 2024.10.22 ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
10. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அமையும்.
11. தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் சாவகச்சேரி பிரதேச சபை, A9 வீதி, கொடிகாமம் என்னும் முகவரியில் பொருட்களை விநியோகித்தல் வேண்டும்.

| இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக(Mn) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | கேள்விப்பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41(6)/Acc/2024/01 | Supply of 900 Nos of LED Bulb (30W) and 200 Nos of Light Control Sensor for Street Lamp | 2.00 | 30 | 20.000.00 | 2024.10.22 |

**க.சந்திரகுமார்,**
**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை.**
**2024.07.17**

(c-806)

# அநுரகுமார ஜனாதிபதியாவதற்கு அனுமதிக்கமாட்டேன்

## லொகான் ரத்வத்தையின் கருத்திற்கு ஐ.ம.ச கண்டனம்

(கொழும்பு)

நான் அரசியலில் இருக்கும் வரை ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திசநாயக்க ஜனாதிபதியாவதற்கு அனுமதிக்கமாட்டேன் என இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை தெரிவித்துள்ளமைக்கு ஐக்கிய மக்கள் சக்தி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

தேர்தல்களில் தலையீடுகள் வன்முறைகள் குறித்த இலங்கையின் வரலாற்றை கருத்தில் கொள்ளும்போது இந்த அறிக்கையில் ஆபத்தான தொனி தென்படுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

வேட்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்படுவதை தடுப்பதற்கான உரிமை எந்த அரசியல்வாதிக்கும் இல்லை.

தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளை நான் ஏற்றுக் கொள்ளாத அதேவேளை தேர்தலில் ஒரு வேட்பாளர் தெரிவு செய்யப்படுவதை தடுக்கும் அல்லது அனுமதிக்கும் உரிமை எந்த அரசியல்வாதிக்கும் இல்லை எனவும் எரான் தெரிவித்துள்ளார்.

அனுரகுமார திசநாயக்க தனது மக்களிற்காக சிறிய கால்வாயையாவது கட்டியிருக்கின்றாரா என கேள்வி எழுப்பியுள்ள லொகான் ரத்வத்தை நான் அரசியலில் இருக்கும்வரை அவர் ஜனாதிபதியாவதற்கு அனுமதிக்க மாட்டேன் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் முன்னாள்
செயலாளரும் ஓய்வு நிலை
அதிபரும் கோட்டக் கல்விப்
பணிப்பாளருமாகிய
அமரர்.

**கே. வி. குணசேகரம்**

அவர்கள் காலமான
செய்தியறிந்து ஆழ்ந்த
துயருறுவதோடு
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம் (F-809)



**பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லச் சிறார்கள்**
**சைவ வித்தியா விருத்திச் சங்கம்.**

# இராசிபலன்

17.07.2024
ஆனி 01, புதன்கிழமை,
ஏகாதசி முன்னிரவு 7.09 மணிவரை

அனுசம் முன்னிரவு 2.05 மணிவரை
சுபநேரம் 4.30-06.30 மணிவரை
இராகுகாலம் 12.00-1.30 மணிவரை

சயன ஏகாதசி விரதம்,
அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம் - ரேவதி

வள்ளுவன்

**மேஷம்** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**கடகம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவை பூர்த்தியாகும், புதிய பதவிகளும் பொறுப்புக்களும் வந்து சேரலாம்.

**மகரம்** பெரிய மனிதர்களின் தொடர்பு.உங்களின் தகுதியை உயர்த்தும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வங்கியில் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** குடும்ப உறுப்பினர்களை அனுசரித்து செல்வது நல்லது, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், விருந்துபசாரங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்** நல்வர்களின் அக்கறையும் ஆதரவும் கிடைக்கும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொழுதுபோக்கு நிகழ்வுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படும், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், உடல்நலனில் கவனம் தேவை.

**மீனம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவார்கள், வர வேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

மின்னல் போல் தோன்றி மறைவதுதான் தீயவர் நட்பு.ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் வீட்டில்

# பட்டதாரிகள் தெருவில்!

## வேலையற்ற பட்டதாரிகள் யாழில் போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தின் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.**



தேங்காய் உடைத்து குறித்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சமின்றி வேலை வாய்ப்பை வழங்க வேண்டுமென இதன்போது வேலையில்லா பட்டதாரிகள் வலியுறுத்தியிருந்தனர்.

“பட்டம் வீட்டில் பட்டதாரிகள் நடு ரோட்டில், ஒரே ஒரு பரீட்சையில் பறந்து போனது பல பரீட்சை எழுதிப் பெற்ற பட்டம், வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், எமக்கான வாழ்க்கையை நாம் எப்போது வாழ்வது?, படிப்பிற்கும் போராட்டம் வேலைக்கும் போராடுவதா?, எல்லோருக்கும் பாரபட்சமின்றி வேலைகளை வழங்க வேண்டும், படித்ததற்கு கூலித்தொழிலா கடைசி வரைக்கும்?, படித்தவர்கள் இந்த நாட்டின் சாபக்கேடுகளா?, பல வருட கனவு வெறும் கனவாகவே போய்விடுமா?, படித்தும் பரதேசிகளாக திரிவதா?” என பல்வேறுப்பட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கான வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்வது மாத்திரம் அன்றி எதிர்கால இளைய தலைமுறைகளும் இதுபோன்ற வேலையற்ற நிலையினை எதிர்கொள்ளக் கூடாது என்பதே தமது கவனயீர்பின் பிரதான நோக்கம் என வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தினர் தெரிவித்தனர். (நி-6)

# மோ.சைக்கிள்கள்

## விபத்து - மூவர் காயம்



(யாழ்ப்பாணம்)

கீரிமலை பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு பெண்களும் குழந்தை ஒன்றும் காயமடைந்துள்ளனர்.

வீதியில் மோட்டார் சைக்கிளில் குழந்தையுடன் பயணித்த இரு பெண்களையும் பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் மோதிவிட்டு அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில், விபத்தினை ஏற்படுத்தி விட்டு தப்பி சென்ற மோட்டார் சைக்கிளை இனம் கண்டுள்ளதாகவும் விபத்தினை ஏற்படுத்திய இருவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-33)

# யுத்திய நடவடிக்கை

## பருத்தித்துறையில் 17 பேர் கைது




(கரணவாய்)

பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்ட யுத்திய நடவடிக்கை மூலம் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க் கிழமை காலை பருத்தித் துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரையோரங்களில் பொலிஸார், விஷேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் இணைந்து மோப்பநாய் சகிதம் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் மற்றும் சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்து கொண்டவர்கள் என 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-6-60)

# தூக்குக் காவடி எடுத்த பெண்



(சாவகச்சேரி)

தென்மராட்சி மீசாலைப் பகுதியில் அமைந்துள்ள பாலையடி விநாயகர் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று 38வயதான பெண் ஒருவர் தூக்குக் காவடி எடுத்து நேர்த்திக்கடனை நிவர்த்தி செய்துள்ளார். (நி-6-30)

## முழு நிலா நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞான வைரவ கோவிலடி சனசமூக நிலயத்தின் முழு நிலா நாள் கருத்தரங்கு நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு குறித்த சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் சனசமூக நிலைய தலைவர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

“தற்போதைய மனித உரிமைப் பிரச்சினைகளும் தொடர்புடைய சட்டங்களும்” எனும் விடயம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். மாவட்ட பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் கருத்துரை வழங்கவுள்ளார். (நி-6)

# நாரந்தனையில் இடம்பெற்ற இரத்ததான முகாம்



(யாழ்ப்பாணம்)

லைக்கா ஞானம் ஏற்பாட்டில் ஊர்காவற்றுறை-நாரந்தனை கிராமத்தில் இடம் பெற்ற இரத்ததான முகாம்.

நாரந்தனை புனித பேதுரு பவுல் ஆலயத்தில் லைக்கா ஞானம் அறக்கட்டளை, நாரந்தனை புனித பேதுரு பவுல் ஆலய இளைஞர் மன்றத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

குறித்த முகாமில் 30 குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டு இருந்தனர். (நி-6)

# அட்டைப்பண்ணையால் பாதிப்பு

## மீனவர்கள் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

கடலட்டை பண்ணை தொழில் நடவடிக்கையால் பாதிக்கப்படும் மீனவர்கள் இணைந்து யாழ்.ஊர்காவற்றுறை பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றை நேற்று முன்தினம் கையளித்தனர்.

வேலணை அம்பிகை நகர் கடற்றொழிலாளர் சங்கம், மெலிஞ்சிமுனை கடற்றொழிலாளர் சங்கம், தம்பாட்டி கடற்றொழிலாளர் சங்கம், சின்னமடு கடற்றொழிலாளர் சங்கம் போன்ற சங்கங்கள் மெலிஞ்சி முனை பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு வரும் கடலட்டை பண்ணைகளால் தமது தொழில் நடவடிக்கை பாதிக்கப்படுவதாக தெரிவித்து ஊர்காவற்றுறை பிரதேச செயலாளரிடம் மகஜரை கையளித்துள்ளனர்.

கடற்றொழிலுக்கு செல்லும் பாதைகள் கடல் அட்டை பண்ணையால் மறைத்து அடைக்கப்படுவதாலும் சிறு கடல் தொழில் செய்யும் மீனவர்கள்தான் பாதிப்படைகின்றோம். இதனால் வாழ்வாதாரமும் வெகுவாக பாதிப்படைகின்றது.

எனவே இந்த கடல் அட்டை பண்ணையை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் பதவிக்காலம்; சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி

**(கொழும்பு)** நாட்டின் 19ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அங்கீகாரமானது, 2024. 07.09 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

அதாவது, அரசியலமைப்பின் 83 ஆம் உறுப்புரையின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட" எனும் சொல்லுக்கு மாற்றாக "ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட" எனும் சொல்லை பதிலீடு செய்து அரசியலமைப்பின் 83 ஆம் உறுப்புரையின் (ஆ) பந்தியைத் திருத்தம் செய்யவே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதற்கும் அதிபரும், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


லங்கா மஹரால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை. (80)

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

077 839 3974


# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை உப அலுவலகம்-தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர் - சதீஸ்கரன் பெண் மதிரெகானா**

**முகவரி- தெல்லிப்பளை கிழக்கு ஒழுங்கை, பளைவீமன்காமம் வடக்கு**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 09,MPCS வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது.

குறித்த ஆதனமானது 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் கமலச்சந்திரன் கீர்த்தனா முகதாவில் 384 ஆம் இலக்கத்தில் முடிந்த நன்கொடை உறுதிப்படி சதீஸ்கரன் மனைவி மதிரெகானா என்பவர்களை வந்தடைந்தது.

**ஆதன விபரம்.**


வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று பளை இறை நிலப்பரப்பு 1 குளி 17.75 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எம்.சண்முகநாதன் அவர்களால் வரையப்பட்ட 3469/29.01.2018 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு -01 துண்டு ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு-தங்கராசா தங்கேஸ்வரனின் ஆதனம்
வடக்கு-ராஜசுந்தரம் மனைவி நமரீதராணியின் ஆதனம்
மேற்கு-ஒழுங்கை
தெற்கு-ரகுநாதன் மனைவி ராஜரஞ்சியின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை சதீஸ்கரன் மனைவி மதிரெகானா எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,** (1488)
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

# சேவை நலன் பாராட்டு விழா



## திரு .தியாகராசா மோகனபாலன்

SLTS-I

**அதிபர், யா/பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை**

சேவை விபரம்

1. யா/பிராம்பற்று கலைமகள் வித்தியாலயம் (ஆசிரியர்) - 20.01.1989- 26.02.1991
2. யா/சில்லாலை றோ.க.த.க பாடசாலை - 27.02.1991- 11.03.1993
3. வட்டு.இந்துக் கல்லூரி - 12.03.1993- 31.03.1993
4. யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாசாலை (தற்காலிகம்) - 01.04.1993- 30.06.1993
5. யா/நாவற்குழி மகாவித்தியாலயம் - 01.07.1993- 03.01.1995
6. யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் - 04.01.1995- 29.10.1995
7. கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம் - 30.10.1995- 08.02.2000
8. கிளி/வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சி (ஆசிரிய ஆலோசகர்-விஞ்ஞானம்) - 09.02.2000- 15.05.2011
9. வலயக்கல்வி அலுவலகம் - வலிகாமம் - 16.05.2011- 18.05.2011
10. யா/யூனியன் கல்லூரி - ஆசிரியர் - 19.05.2011- 25.05.2011
11. யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் - 26.05.2011- 11.08.2014
12. யா/பொன்னாலை வரதராஜ பெருமாள் வித்தியாசாலை (அதிபர்) - 12.08.2014- 02.01.2017
13. கோட்டக்கல்வி அலுவலகம் சங்கானை (தற்காலிகம்) - 03.01.2017- 12.02.2017
14. யா/பொன்னாலை வரதராஜ பெருமாள் வித்தியாசாலை (அதிபர்) - 13.02.2017- 16.07.2024

**எமது பாடசாலையில் கடந்த பத்து வருடங்கள் அதிபராக அருஞ்சேவையாற்றி இன்றுடன் . சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.தியாகராசா மோகனபாலன் அவர்கள் எல்லா நலன்களும் பெற்று வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்**

(சீ-807)

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம் , யா/பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் கனமழை!

❖ 35 பேர் உயிரிழப்பு

❖ 230 பேர் படுகாயம்




(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் மாலை இடியுடன் கூடிய பலத்த மழையால் ஜலாலாபாத் மற்றும் நங்கர்ஹர் மாகாணத்தில் மரங்கள். சுவர்கள் மற்றும் வீடுகளின் கூரைகள் இடிந்து விழுந்ததில் 35 பேர் உயிரிழந்தனர். மேலும் 230 பேர் படுகாயமடைந்தனர்.

காயம் அடைந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் நங்கர்ஹார் பிராந்திய மருத்துவமனை மற்றும் பாத்திமா-துல்-சஹ்ரா மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். உயிரிழந்தவர்கள் உடல்களும் இதே மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக எடுத்து செல்லப்பட்டன.

கடந்த மே மாதம் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் நூற்றுக்கணக்கான மக்கள் பலியாகினர். மேலும் விவசாய நிலங்கள் சேதமாயின. உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றான ஆப்கானிஸ்தான் காலநிலை மாற்றத்தின் பாதிப்பு காரணமாக இயற்கை பேரிடர் சம்பவங்களுக்கு ஆளாகி வருவது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஓமானில் துப்பாக்கி சூடு 4 பேர் உயிரிழப்பு



(மஸ்கட்)

ஓமன் தலைநகர் மஸ்கட்டில் உள்ள பள்ளிவாசல் ஒன்றுக்கு அருகே மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் குறித்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அமெரிக்கர்களை அப்பகுதியில் இருந்து விலகி இருக்குமாறு ஓமானில் உள்ள அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரேபிய தீபகற்பத்தின் தென்கிழக்கில் தனித் தன்மை வாய்ந்த நாடான ஓமானில் இத்தகைய வன்முறைகள் இடம்பெறுவது அரிதான ஒன்றாகும். (நி-6)

# காசா இடிபாடுகளை அகற்ற 15 ஆண்டுகள் ஆகலாம்

## ஐ.நா அறிக்கை



(ஜெனீவா)

ஐ.நா அறிக்கையின்படி, காசாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்கள் காரணமாக தரைமட்டம் ஆக்கப்பட்ட கட்டட இடிபாடுகளை அகற்ற 15 ஆண்டுகள் ஆகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வெடிக்காத வெடி பொருட்கள், தீங்கு விளை விக்கும் பொருட்கள் மற்றும் இறந்தவர்களின் உடல்கள் என காசா இடிபாடுகளில் சிக்கியுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரணம் மற்றும் பணி முகமை மதிப்பிட்டுள்ளது.

மேலும் பாலஸ்தீன அகதிகள் மீதான இஸ்ரேலின் சமீபத்திய தாக்குதல்களால் காசா பகுதியில் 40 மில்லியன் தொன் இடிபாடுகள் அகற்றப்பட வேண்டும்.

காசா பகுதி வெடிக்காத வெடிகுண்டுகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் பொருட்களைக் கொண்டிருப்பதால் மக்கள் ஆபத்தான நிலையில் இருப்பதாக கூறியுள்ளது.

அத்தோடு, இந்த இடிபாடுகளை அகற்ற 100 இற்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் தேவைப்படும் மற்றும் $500 மில்லியனுக்கும் அதிகமாக செலவாகும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.


இந்த இடிபாடுகளால் சுகாதார பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் ஒக்டோபர் 7 முதல் இஸ்ரேலிய போர் விமானங்களால் காசா மீது சுமார் 50,000 குண்டுகள் வீசப்பட்டதாகவும், 2,000 முதல் 3,000 குண்டுகள் வெடிக்கவில்லை என்றும் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## அம்பானி வீட்டுத் திருமணம்

### விருந்தினர்களுக்கு தங்கத்திலான

# பரிசுப் பொருட்கள்





(டில்லி)

ஆசியாவின் மிகப்பெரிய செல்வந்தரான முகேஷ் அம்பானியின் இளைய மகனான ஆனந்த் அம்பானியின் திருமண விழாவில் கலந்துகொண்ட விருந்தினர்கள் சிலருக்கு இந்திய மதிப்பில் ரூபாய் 2 கோடி மதிப்பிலான கைக்கடிகாரங்கள் பரிசாக வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் கடிகாரங்கள் ஷாருக்கான், ரன்வீர் சிங் மற்றும் பலருக்கு வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் பலருக்கு விலை உயர்ந்த கைப்பைகள், தங்க நெக்லஸ்கள் மற்றும் நவநாகரீக காலணிகள் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது. (நி-6)

# சீறாமல் குளியலை ரசிக்கும் சிறுத்தை

தென் அமெரிக்க பகுதிகளில் காணப்படும் சிறுத்தை இனங்களை சேர்ந்தது ஜாகுவார் சிறுத்தை.


பூனைக்குட்டியை குளிப்பாட்டுவதுபோல ஒரு கையால் குழாயில் தண்ணீரை அழுத்து மறு கையால் சிறுத்தைக்கு உடம்பை தேய்த்து விட்டு குளிப்பாட்டுகிறார். சிறுத்தையும் சீறாமல் குளியலை ரசிக்கிறது.

அந்த பெண் உயிரியல் பூங்கா பராமரிப்பாளரா அல்லது சிறுத்தையை குட்டி யில் இருந்து தத்தெடுத்து வளர்ப்பவரா என்று தெரிய வில்லை.

இந்த வீடியோ எங்கு பதிவு செய்யப்பட்டது என்று தெரிய வில்லை. ஆனால் எக்ஸ் வலைத்தளத்தில் வெளியான இந்த வீடியோ 94 லட்சம் பேரின் பார்வையைத் தாண்டி ஒருகோடி பார்வையாளர்களை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. வலைத் தளவாசிகள் பெண்ணின் செயலை பாராட்டியும், விமர்சித்தும் கருத்துகள் பதிவிட்டு வருகிறார்கள். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் தீபத்தை ஏந்திய ஈழத்தமிழன் தர்ஷன்



(பாரிஸ்)

**ஒலிம்பிக் தீபத்தை ஏந்திய முதல் இலங்கைத் தமிழர் என்ற பெருமையை பிரான்ஸில் வசித்து வரும் வெதுப்பக உரிமையாளர் தர்ஷன் செல்வராஜா பெற்றுள்ளார்.**

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் தர்ஷன் செல்வராஜாவிடம் ஒலிம்பிக் தீபம் வழங்கப்பட்டிருந்த நிலையில் அவர் அதனை ஏந்தி சுமார் 2.5 கிலோ மீற்றர் வலம் வந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்ஷன் பாரிஸ் நகரில் கடந்த வருடம் இடம்பெற்ற பாண் தயாரிப்புப் போட்டியில் முதலிடம் பெற்றிருந்தார்.

இதனையடுத்து பிரான்ஸ் ஜனாதிபதியின் வசிப்பிடமாகிய எலிஸே மாளிகைக்கு பாண் விநியோகம் செய்யும் உரிமையையும் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

## 42 பெண்களின் சடலங்கள் கென்யாவில் மீட்பு



(நைரோபி)

கென்யாவின் நைரோபிக்கு அருகிலுள்ள கல்குவாரி ஒன்றில் அதிகளவான பெண்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


இதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பின்னர் சந்தேகநபர் தெரிவிக்கையில் மனைவி உட்பட 42 பெண்களைக் கொன்று சடலங்களை அந்த இடத்தில் வீசியதாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட பெண்களுடையது என நம்பப்படும் பல்வேறு சந்தேகத்திற்கிடமான பொருட்கள் அவரது வீட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (நி-6)

## இம்ரானின் கட்சியைத் தடை செய்ய பாகிஸ்தான் அரசு நடவடிக்கை

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரான இம்ரான் கானின் தெஹ்ரீக்-ஈ-இன்சாஃப் கட்சியைத் தடை செய்ய பாகிஸ்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இம்ரான் கானினால் கடந்த 1996 ஆம் ஆண்டு தெஹ்ரீக்-ஈ-இன்சாஃப் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் முறையாக இம்ரான்கான் பாகிஸ்தானின் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட நிலையில், 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற நம்பிக்கையில்லா தீர்மானத்தில் தோல்வியைச் சந்தித்து ஆட்சியை இழந்தார்.

இதனைத் தொடர்ந்து, ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்ட இம்ரான்கான், தற்போது சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். இதற்கிடையே, கடந்த பெப்ரவரி 8 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் இம்ரான்கானையும் அவரது தலைமையிலான கட்சியையும் தேர்தல் ஆணையம் தகுதி நீக்கம் செய்தது.

எனினும், தெஹ்ரீக்-ஈ-இன்சாஃப் கட்சி வேட்பாளர்கள் சுயேச்சையாகப் போட்டியிட்டு அதிகபட்சமாக 93 இடங்களில் வெற்றி பெற்றனர். இந்த நிலையிலேயே இந்தக் கட்சியை தடை செய்ய பாகிஸ்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரட்டும் தொற்றுநோய்கள் : விழிப்புணர்வு மிக அவசியம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,


வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நுண்ணங்கிகளின் வீரியத்தை அவை தொற்று நோயாக்கிகளாக இனங் காணப்படும் போதும் அதனால் ஏற்படும் மனித அழிவுகளை கண்முன்னே செய்திகளினூடும் கண்டும் கேட்டிருக்கின்றோம். இவ்வாறான தொற்று நோய்களை நாம் அலட்சியம் செய்தால் வைரசு வீரியமாக பரவினால் அதன் பின்னர் நமது உறவுகளை காப்பாற்ற முடியாமல் போய்விடும். உலகளாவிய ரீதியில் பரவிய கொவிட் வைரசுவினால் பலவுயிர்கள் உலகளாவிய ரீதியில் மடிந்ததனை நாம் நெஞ்சு பதை பதைத்து ஏற்றுக்கொண்டோம். முக்கியமான பலர் இந்த தொற்று நோயில் மடிந்துவிட்டனர். குறிப்பாக தொற்று நோயாளிகளுக்கு இன்புளுவென்சா ஒரு வைரசு தொற்றுநோய். பலருக்கு தற்போது இன்புளுவென்சா வைரசு நோய்த்தொற்று ஏற்படுவதாக அறியப்பட்டுள்ளது. இது ஒருவர் பொது வெளியில் தும்மும் போது காற்றினூடாக பரவப்பட்டு இன்னொருவருக்கு தொற்று ஏற்படலாம். இதற்காக முககவசம் அணிந்திருப்பது இந்நோய் தொற்று ஏற்படாது தவிர்க்கலாம். இருமல் மற்றும் அஸ்துமா தொடர்ந்தும் நீடித்தால் அவசியம் மருத்துவர்களை நாடி சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். நீங்களே உங்களுக்கு மருத்துவம் பார்த்திடாதீர்.

ஜப்பானில் பரவும் ஸ்ரெப்டோ கொக்கசு டொச்சிக் ஷக் சின் றோம் பக்றீறியாவின் பாதிப்பு பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. இதனது தாக்கத்தினால் கடந்த எட்டு மாதங்களில் ஐந்து கர்ப்பிணித் தாய் மார்கள் உயிரிழந்திருக்கின்றனர். இந்த பக்றீறியா தொற்று மூக்கு மற்றும் தொண்டை வழியாக பரவுவதாக அறிய முடிகின்றது. இதனை "மாமிசம் உண்ணும் பக்றீறியா" எனவும் அழைக்கின்றனர். எமது நாட்டில் இந்த நோய் பரவலுக்கான சாத்திக்கூறுகள் உடனடியாக இல்லையென்றாலும் இந்த நோயைப் பற்றி அறிந்து தெரிந்து வைத்திருப்பது வருமுன் காக்க உதவும். இந்நோய் கொண்டவர்கள் காய்ச்சல், தலைவலி, குளிர், குமட்டல் மற்றும் வாந்தி என்னும் குணங்குறிகளை கொண்டிருப்பர். சாதாரண காய்ச்சல் என உள்வீட்டுமருத்துவம் பார்க்க துணிந்து விடாதீர். முடிந்தளவுக்கு வைத்தியரை அணுகி அவர்களின் பரிந்துரையில் காய்ச்சலின் தன்மையை அறிந்து உங்களை காப்பாற்றிக் கொள்வது மிக முக்கியம்.

பறவைக் காய்ச்சல் மனிதனுக்கு தொற்றக் கூடிய வைரஸ் நோயாகும். விலங் குகளை கைகளால் அளைதல் மற்றும் மிருகங்களை கொலைசெய்தல். மிருக இறைச்சி விற்பனை செய்பவர்கள், இறைச்சி விற்பனை நிலையங்களில் பணிபுரிபவர்கள் என அனைவரும் இந்த கொடியதொற்று நோயிற்கு ஆளாகக் கூடும். இந்நோய் கண்டவர்கள் சாதாரண காய்ச்சல் குணங்குறியில் தொடங்கி கண்தொற்று, மற்றும் சுவாசிப்பதில் இடர்ப்பாடு என பலவாறாக இருக்கும். எது இருந்தாலும் விரைந்து சென்று மருத்துவரின் ஆலோசனையை பெற்று நோயைக் குணமாக்கலாம். எது எப்படியிருந்தாலும் நோய்க்குணங்குறி ஆரம்பிக்கும் போதே அவதானமாக நாம் நடப்பது அவசியமல்லவா. அதனால் தற்காப்பு நடவடிக்கைகளில் அனைவரும் ஈடுபடுவது மிகவும் முக்கியமானதாகும். குறிப்பாக பறவைகள் கொந்தியபழங்கள், காய்களை கழுவாது அப்படியே உண்பது நோய்த்தொற்றினை வலிந்து உடலுக்குள் அழைத்து விடும். பறவைகள் குறிப்பாக செல்லப் பிராணிகள் வளர்ப்போர் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலங்களில் செல்லப் பிராணிகளுக்கான நோய்த் தடுப்பூசிகளை போடுவதன் மூலமும் அவற்றை சுத்தமாக வளர்ப்பதன் மூலமும் தொடர்ச்சியாக அவற்றை கண்காணிப்பதன் மூலமும் நோய்த்தொற்று ஏற்படுவதனை தவிர்க்கலாம்.

இவற்றுடன் நாம் எதிர் பார்த்திராத நேரத்தில் தொற்றுநோய்கள் எமது நாட்டினுள் வந்து பல்கிப் பெருக வாய்ப்புக்கள் அதிகமே. மருத்துவத்துறையின் அறிவுப்புக்களை செவிமடுத்து நோய்த்தொற்றுகளிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியம். டெங்கின் பெருக்கமும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் எம் முன்னே இருக்கும் உதாரணங்கள். டெங்கு நோயைக் காவும் நுளம்பு பெருகுவதற்காக அனைத்து வழிகளையும் தவிர்த்து கொள்வது இந்நோயிலிருந்து அனைவரையும் பாதுகாக்கலாம். மாறாக அலட்சியம் செய்தால் உயிரிழக்க நேரிடும். எமது பிரதேசத்தை சுத்தமானதாக நீர்தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அனைத்து பெருமக்களுக்கும் பொதுவானது. நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த தேவையான அனைத்து வழிகளையும் மேற்கொள்வதோடு உடலை நோயெதிர்ப்பு தன்மையுடையதாக வைத்துக் கொள்வதும் அவசியமானதாகும்.



கொவிட் வைரஸின் திரிபுடைய தொற்றுநோயும் உலகத்தில் இன்னும் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அறியத்தரப்பட்டுள்ளன. கொவிட் வைரஸ் விரைந்து பரவும் போது அந்த தொற்று ஏற்படாது தவிர்க்க அனைத்து வழிமுறைகளையும் நாம் செய்தல் அவசியமாகும். தொற்று நோய்கள் எம்மை வந்தடைவதற்கு முன்னர் எமது மக்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வுகளை தொடர்ச்சியாக வழங்கி அவர்களுக்கு நோய்த்தொற்று ஏற்படாத வண்ணம் பாதுகாப்பு பொறிமுறையை உருவாக்கிடல் மிகவும் நன்று.

## இன்று ஒரு தகவல் 185



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

### அலுவலக அரட்டைகள்

நீண்ட நாளைக்குப் பிறகு ஒரு நண்பரைப் பார்த்தேன். உங்களோடு உட்கார்ந்து கொஞ்ச நேரம் அரட்டை அடிக்க வேண்டும் போல ஆசையாக இருக்கிறது என்றேன். அப்படி என்றால் நேராக எங்கள் அலுவலகத்திற்கு வந்து விடுங்கள் அது தான் வசதி என்றார். இப்படி அரட்டை அடிப்பதற்கு அலுவலகம் தான் சரியான இடம் என்று நினைப்பவர்கள் பலபேர் உண்டு. அவர்களுக்கொல்லாம் கூடிய விரைவில் ஒரு இடைஞ்சல் வந்து விடும் போல இருக்குறது.

கைக்கு அடக்கமாக ஒரு பிஸ்கட் வடிவிலே இரண்டு அங்குல அகலத்தில் சதுர வடிவிலே ஒரு கருவி தயார் செய்து இருக்கின்றார்களாம். இது அரட்டை அடிப்பவர்களை எல்லாம் கண்டுபிடித்து விடுமாம். Infra red rays என்று சொல்கின்றோமே அகச் சிவப்புக்கதிர்கள் அதனாலே இது இயங்குகிறது.

அலுவலகத்தில் வேலை செய்கின்றவர்கள் சீருடையில் இந்தக் கருவியை பொருத்தி விட வேண்டியது அல்லது பையிலே கூட வைத்து விடலாம். ஒவ்வொருவர் கருவிக்கும் ஒரு நம்பர் உண்டு. ஒவ்வொன்றும் வேறு வேறு சமிஞ்ஞைகளை அனுப்பும். இதை ஒரு கணனி பதிவு செய்யும். அந்த ஊழியர் எங்கே போனாலும் அதை இது பதிவு செய்து கொண்டே வரும். அறையில் இருக்கின்றாரா? சிற்றூண்டிச்சாலையில் இருக்கின்றாரா? பாத்ரூமிலே இருக்கின்றாரா? எல்லாம் பதிவாகிவிடும்.

பல ஊழியர்கள் ஒரே இடத்தில் கூடி கும்பலாக இருந்தாலும் சரி அலுவலகத்திற்குள்ளே யாரும் போகக் கூடாத முக்கியமான இடத்திற்கு ஒருவர் இரகசியமாக போனாலும் சரி கணனி காட்டிக் கொடுத்து விடும். மேல் நாடுகளில் பல அலுவலங்களில் இப்போது இதனைப் பயன்படுத்துகின்றார்களாம். இந்தக் கருவியை அணிந்திருக்கின்றவர் தனக்குரிய இருக்கையிலே அமர்ந்த உடனே அவர் மேசையிலே இருக்கின்ற கணனி அவருடைய வருகையை பதிவு செய்து விடும்.

சரி இந்தக் கருவியை யாருக்கும் தெரியமால் வெளியிலே எடுத்து வைத்து விட்டு ஏமாற்றிவிடலாம் என்று நினைத்தாலும் அது முடியாது. எங்கள் ஊருக்கு இந்த கருவி வந்தால் நல்லது தான். அலுவலகத்தில் வேலை செய்யமால் அடுத்தவர்கள் அறைக்கு சென்று அரட்டை அடிக்கிறது, இரகசிய கோப்புக்களை வைத்திருக்கின்ற அறைக்குள் சென்று நோட்டம் பார்ப்பது இதையெல்லாம் கட்டுப்படுத்தி விடலாம்.

சில பேர் வேண்டும் என்றே வேலை நேரம் பார்த்து பாத்ரூம் எங்கே இருக்கிறது என்று தேடிப் போய்விடுவது உண்டு. அவர்களை எல்லாம் இது இலகுவாக கண்டுபிடித்து சொல்லிவிடும். இந்த கருவியாலே வேறு சில பயன்களும் உண்டு. ஒரு பெரிய அதிகாரி அறைக்குள்ளே குறிப்பிட்ட சில பேர் தான் நுழைய முடியும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு தகுந்த மாதிரி செட் செய்து வைத்து கொள்ளலாம். அப்படி வைத்துக் கொண்டால் குறிப்பிட்ட சில பேர் தான் கதவை திறக்க முடியும்.

அதே மாதிரி பணம் நகை இது போன்ற விலையுயர்ந்த பொருட்கள் இருக்கின்ற அரைக்குள்ளே குறிப்பிட்ட ஒரு சிலரை மட்டுமே போய் வருகின்ற மாதிரி செய்து கொள்ளலாம். இப்போது பிரிட்டன் மேல் பல இடங்களிலே இந்த கருவி சோதனை முறையிலே பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

வயதானவர்களுக்கும் நோயாளிகளுக்கும் ஆபத்து காலத்திலே இது உதவி செய்வதற்கும் அந்த கருவி பயன்படுத்தலாம். இப்போது அலுவலகத்திலே வேலை செய்கின்றவர்கள் எவ்வளவு விழிப்புணர்ச்சியோடு இருக்கின்றார்கள் தெரியுமா? அன்றைக்கு அப்படித்தான் சார் ஒரு அலுவலக நண்பரை பார்த்து இன்றைக்கு என்ன செய்தி சார் என்றேன். சரியாக ஞபாகம் இல்லை சார் என்றார். அது தான் கையிலே பத்திரிகை வைத்திருக்கின்றீர்களே அதைப் பார்த்தால் தெரியுமே என்றேன். அது எப்படி சார்தெரியும்? இது நேற்று வாங்கிய பேப்பர் ஆகிட்டே என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னியாங்குள வழித்தட பேருந்து சேவை வேண்டும்

## கிராம மக்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக் குளம் மன்னியாகுளம் வழி யாக கிளி நொச்சி மேற்கிற் கான பேருந் துகள் பயணிப் பதற்கான நடவ டிக்கையினை எடுக்க வேண்டும்என வன் னேரிக்குளம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கிராமத்தில் 500 இற்கு மேற்பட்ட குடும்பங் கள் வாழ் கின்றன. இக் கிராமம் வழி யாக நடைபெறு கின்ற கிளி நொச்சி மேற் கிற்கான பேருந்து சேவை கள் வன்னேரிக் குளத்தின் கீழ் வழியாக வயல் வெளி ஊடாக நடைபெறுகின்றது. இதன் கார ணமாக வன் னேரிக்குளம் மகா வித்தியாலய சூழலுக்கு அனைத்து பேருந்துகளும் செல்வதில்லை.

கிளிநொச்சி மேற்கிற் கான பேருந்துகள் வன் னேரிக் குளம் சோலை, மன் னியா குளம் வழி யாக ஜெயபுரம் முழங்கவில் வரை பயணிக்குமானால் போக் குவரத்து நெருக் கடியினை எதிர் கொண் டுள்ள வன் னேரிக்குள மாணவர்கள் மற்றும் சூழ வுள்ள மக்கள் பயனடை வார்கள்.

எனவே இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரி கள் நட வடிக்கை எடுத்து குறித்த பேருந்து சேவையை முன்னெடுக் குமாறு கிராமமக்கள்கோரிக்கை விடுத்துள்ள னர். (நி-6-350)

# கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திற்கு புதிய கட்டடம்

(அக்கராயன்)

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திற்கு புதிய நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டு வருவ தாக கிளிநொச்சி வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் அ.சிவன ருள்ராஜா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வடக்கு வல யத்திற்கு நிரந்தர கட்டடம் உள் ளதா என அவரி டம் வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு கல்வி வலயம் காணப்பட்ட நிலையில் இரு ஆண்டுகளுக்கு முன்னர் கண்டாவளை, பளை கல் விக் கோட்டங்களை இணைத்து கிளிநொச்சி வடக்கு கல்வி வல யம் உருவாக்கப்பட்டது. கரைச்சி, பூநகரி கல்விக் கோட்டங்களை இணைத்து கிளிநொச்சி தெற்கு கல்வி வலயம் தொடர்ந்து இயங்கி வருகின்றது.

38 பாடசாலைகள் இவ் வலயத்தில் உள்ளன. தற் போது வலயம் பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தின் ஒன்று கூடல் மண்டபத்திலேயே இயங்கி வருகின் றது. அதேவேளை கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்திற் கான இரு மாடி கொண்ட புதிய கட்டடம் பரந்தன் குமரபுரம் பகுதியில் அமைக்கப்பட்டு வரு வதாக என வும் தெரிவித்தார். (நி-6-350)

# நடை பவனி

(யாழ்ப்பாணம்)

யா /கொழும்புத்துறை இந்து மகாவித்தியா லயத்தின் 150 ஆவது வருட நிறைவினை முன் னிட்டு நாளை மறுதினம் காலை 7.30 மணிக்கு நடைபவனி நடை பெற வுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி மகாவித்தியாலய தவத்திரு யோகர் சுவாமிகள் அரங்கில் ஆண்டு நிறைவு மலர் வெளி யீடும், பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்வுகளும் இடம் பெற வுள்ளது. (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>4 இல் செவ்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: ஆங்கில பட்டதாரி Lecturer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/14661 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: அனுஷம்<br>கி.பா: 6 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, Beautican<br>எதிர்பார்ப்பு: தொழில் நற்குணமுள்ள மணமகன்<br>தொ.இ: G/14700 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>12 இல் செவ்<br>கி.பா 5<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bsc,Civil Engineer<br>எதிர்பார்ப்பு: Degree Holder(Bsc)<br>தொ.இ: B/14662 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 47<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HND IT IT Project(traninig)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/11871 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>2 இல் செவ்<br>உயரம்: 5,5"<br>தகைமை/தொழில்: Civil Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/14663 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:Bsc, Msc, Monitering Evaluation officer<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி மட்டும்<br>தொ.இ: G/10927 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்









சிவபூமி அறக்கட்டளையால் வட்டுக் கோட்டையில் அமைக் கப்பட்ட தேவார மட திறப்பு விழா, சிவபூமி அறக்கட்டளையின் அமைப்பாளர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.

இந்நிகழ்வில் சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் ஸ்ரீ. சிவ ஞானம் அவர்கள் கலந்து கொண்டு குறித்த கட்டடத்தை திறந்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் - 3
# பொன்னியின் செல்வன்
### காவியத் தொடர் 534



பூங்குழலி! உன்னைப் பார்ப்பதற்காகவும், உன் இனிய கானத்தைக் கேட்பதற்காகவும் தஞ்சையிலிருந்து பலநாள் பிரயாணம் செய்து வந்தேன். இங்கே வந்த பிறகும் உன்னைக் காணாமல் இத்தனை நாள் காத்துக் கொண்டிருந்தேன்! தற்செயலாக உன்னைப் பார்த்து விட்டுத் தொடர்ந்து ஓடிவந்தேன். ஏன் அப்படி ஓடினாய்? எங்கே, ஒரு கீதம் பாடு கேட்கலாம்!

பாடுவதற்கு நல்ல இடம் அதைவிட நல்ல சந்தர்ப்பம்!

"நீ பாடாவிட்டால் நானே இன்னொரு பாட்டுப் பாடுகிறேன். இந்தக் காட்டில் தூங்கிக் கொண்டிருக்கும் மிருகங்களை யெல்லாம் விழித்தெழுந்து ஓடச் செய்கிறேன், பார்!"

"பித்தா! பிறைசூடி பெருமானே அருளாளா!" போதும், அத்தான்! கொஞ்சம் பாட்டை நிறுத்து!

"அப்படியானால் நீ பாடுகிறாயா?" இவ்விதம் இரைந்து கேட்டுவிட்டுச் சேந்தன் அமுதன் உடனே மெல்லிய குரலில், "பூங்குழலி! உன்னைத் தொடர்ந்து இன்னொருவன் வந்து கொண்டிருந்தான். உனக்கு எச்சரிக்கை செய்வதற்காகவே சத்தம் போட்டுப் பாடினேன். அவனுக்கும் உன் அண்ணன் மனைவிக்கும் இன்று சாயங்காலம் ஏதோ இரகசியசம் பாஷணை நடந்தது. அவன் யார் என்று உனக்குத் தெரியுமா?" என்றான்.

பிறகு மீண்டும், உரத்த குரலில், "என்ன சொல்லுகிறாய்! நீ பாடுகிறாயா? நான் பாடட்டுமா? சிவபெருமான் சுடுகாட்டில் ஆடினார் நீ வெறுங்காட்டில் பாடக் கூடாதா?" என்று இரைந்தான்.

"இதோ பாடுகிறேன் கோபித்துக் கொள்ளாதே!" என்று சொல்லிவிட்டுப் பூங்குழலி பின்வருமாறு பாடினாள்:

"பறக்கும் எம் கிள்ளைகாள்! பாடும் எம் பூவைகாள்! அறக்கண் எனத்தகும் அடிகள் ஆரூரரை மறக்க கில்லாமையும் வளைகள் நில்லாமையும் உறக்கமில்லாமையும் உணர்த்த வல்லீர்களே!",

இவ்விதம் பாடிவிட்டு மெல்லிய குரலில், "அமுதா! நான் வந்தது உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

பூங்குழலி! கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து படகு வருவதைப் பார்த்தேன். நீயாக இருக்கலாம் என்று உத்தேசமாக எண்ணி இங்கே உன்னைத் தேடி வந்தேன். அதே சமயத்தில் பழுவூர் ஆட்கள் சிலரும் இந்தப் பக்கம் வந்தார்கள். படகில் உன்னைக் காணவில்லை. ஆனால் என் நண்பன் வல்லவரையனையும் இளவரசரையும் பார்த்தேன். வல்லவரையனிடம் பழுவூர் ஆட்கள் வருவது பற்றிக் கூறினேன். பிறகு இளவரசரை நாங்கள் இருவருமாகத் தூக்கிக் கொண்டு போய் மறைந்த மண்டபத்தில் சேர்த்தோம்."

"ஐயோ! என்ன தவறு செய்துவிட்டீர்கள்! படகு என்ன ஆயிற்று!

"படகை யாராவது பார்த்தால் சந்தேகம் ஏற்படும் என்று ஓடை நீரில் கவிழ்த்து விட்டோம்! ஏன் பூங்குழலி! பாட்டை ஏன் நிறுத்திவிட்டாய்! மிச்சத்தையும் பாடு!" என்று பிற்பகுதியை உரத்த குரலில் கூறினான் சேந்தன் அமுதன்.

"மறந்து விட்டது அமுதா இந்தக் கோடிக்கரைக் குழகரைப் பற்றி ஒரு பாடல் உண்டே! உனக்கு அது நினைவிருக்கிறதா?- நினைவிருந்தால் பாடு!"


"ஓ! நினைவிருக்கிறது!" என்று சேந்தன் அமுதன் இரைந்து சொல்லிவிட்டுப் பாடினான்: "கடிதாய்க் காற்று வந்தெற்றக் கரை மேல் குடிதானயலே இருந்தால் குற்றமாமோ? கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர் அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே!"

பாட்டு முடிந்தவுடனே பூங்குழலி, "அத்தான்! என்னைத் தொடர்ந்து வந்தவன் போய்விட்டானா? பக்கத்தில் மறைந்து நின்று கொண்டிருக்கிறானா?"(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## எல்லா உயிர்களுக்கும் உதவிசெய்



ஒரு நாட்டு ராஜாவிடம் முத்தன் வேலை செய்து வந்தான். அந்த ராஜாவுக்கு மிருகங்கள் பறவைகள் பேசும் பாஷை தெரியும். முத்தனுக்கு ஒரே ஆச்சரியம், எப்படி ராஜா விலங்குகள் பேசுவதை அறிந்து கொள்கிறார் என்பது அவனுக்கு வியப்பாக இருந்தது. முத்தன் தான் அந்த ராஜாவுக்கு தினமும் உணவு கொண்டு கொடுப்பான். ராஜாவின் உணவில் ஒரு பகுதி மட்டும் தனியாக தனிப் பெட்டியில் ராணியே சமைத்துத் தருவாள்.

ஒரு நாள் முத்தன் அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தான். அந்த பெட்டிக்குள் ஏதோ துண்டு துண்களாக சமைத்து வைக்கப் பட்டிருந்தன. இது என்னவாக இருக்கும் என்று ஒரு துண்டை எடுத்து சாப்பிட்டுப் பார்க்கிறான். அதைச் சாப்பிட்டதும் முத்தனுக்கு பறவை மிருகங்களின் பேசும் பாஷை புரிய ஆரம்பிக்கிறது. புதிய சக்தி கிடைத்ததும் அவன் அரண்மனையில் இருந்து அப்படியே புறப்பட்டு கிளம்பி விடுகிறான்.

அவன் குதிரையில் கிளம் பிச் செல்லும் வழியில் எறும்புகள் சாரை சாரையாக போவதை பார்த்தான், எறும்பின் தலைவன் இவனிடம் குதிரையை எறும்புகளை மிதிக்காத வண்ணம் செலுத்தும் படி வேண்டிக் கொண்டது. அவனும் அப்படியே செய்தான். எறும்புகள் நன்றி தெரிவித்து, என்றேனும் உங்களுக்கு உதவு வேன் என்று கூறியது.

அடுத்து, அவன் செல்லும் வழியில் குளம் இருந் தது அங்கு மூன்று மீன்கள் அழும் குரல் கேட்டது. அவை புதருக்குள் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தன. குளத்தில் தாவிக் குதிக்கும் போது அவை தவறிப் புதரில் விழுந்திருந்தன.

அத்தனையும் காப்பாற்றி தண்ணீருக்குள் மீண்டும் எடுத்துவிட்டு கிளம்பினான். மீன்களும் நன்றி தெரிவித்தது.

அவன் கொஞ்ச தூரம் ஒரு காட்டைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தான். சின்னஞ்சிறு காகங் களின் குரல் கேட்டது. தாய் காக்கை அவைகளிடம் "நீங்களே உங்கள் உணவைத் தேடிக் கொள் ளுங்கள் " என்று கூறி மரத் தில் இருந்து கீழே தள்ளி விட்டிருந்தது. அவைகளுக்கு தானியங்களை உணவாக கொடுத்து விட்டு கிளம்பி னான். அவை மிகுந்த மகிழ்ச்சியுடன் நன்றி கூறின.

அதன் பின் காட்டைக் கடந்து அவன் வேறு ஒரு நாட்டுக்குள் நுழைந்தான். ஊரே கோலாகலமாக இருந்தது.

அந்த நாட்டு இளவரசி தன் கணவனைத் தேர்ந்தெடுக்கும் சுயம்வரம் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருந்தாள். வேலைக்காரனுக்கு ஆசை, எப்படியும் இந்தப் போட்டியில் கலந்து கொண்டு நாம் இந்த நாட்டின் அரசனாக வேண்டும் என ஆசைப்பட்டான்.

போட்டியில் கலந்து கொண்டான். போட்டியில் வெற்றி பெறவில்லை என்றால் சிறையில் தள்ளி விடுவார்கள். போட்டி ஆரம்பம் ஆனது, அவனை ஒரு குளத்திற்குக் கூட்டிப் போனார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யா திருப்பது கோழைத்தனமாகும்.
–கோன்பு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உண்மைக்காகக் குரல் கொடுப்பதாயின் அங்கும் உண்மை இருக்க வேண்டும்

நியாயம் என்பது எது? அது எதனால் அளக்கப்படுகிறது எனக் கேட்டால், நியாயம் என்பது தர்மம். அதன் அளவுகோல் பொது மக்கள்.

ஆக, எதை நாம் பேசுவதாக இருந்தாலும் அதற்குள் நியாயம் இருக்க வேண்டும்.

இதனை இன்னும் திருத்தமாகச் சொல்வதாயின், நாம் பேசுகின்ற விடயத்துக்குள் தர்மம் இருக்க வேண்டும்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனித்தாக வேண்டும். இராமபிரான் அவதார புருசர். தர்மத்தை நிலைநாட்டுவதற்காக அயோத்தியில் அவதரித்தவர்.

அவரின் அவதாரம் இராமாயணம் என்ற இதிகாசமாக வெளிப்பட்டுள்ளது.

இந்த உலகம் உள்ளவரை இராமாயண இதிகாசம் உயிர்ப்போடு இருக்கும்.

ஆயினும் இதில் அதிசயமும் ஆச்சரியமும் என்னவென்றால், உலகில் 300க்கும் மேற்பட்ட இராமாயண இதிகாசங்கள் உண்டு.

இதில் நாம் அறிந்த இராமாயணத்தில் வாலிவதை இன்றுவரை விமர்சனத்துக் குரியதாகின்றது.

அதற்குக் காரணம் இராமபிரான் மறைந்திருந்து வாலியை வதம் செய்தது யுத்த தர்மமன்று என்பதேயாகும்.

ஆம், வாலிவதை குறித்த, வாதப் பிரதிவாதம் நீண்டு நிலைத்து நிற்பதற்கு இதுவே காரணமாயிற்று.

ஆக, தர்மத்தை நிலைநாட்ட வந்த இராமபிரானாயினும் தர்மத்தோடுதான் காரியங்களைச் செய்ய வேண்டும். அதை மீறினால் நியாய உலகம் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கும்.

ஆம், நாம் எதுபற்றிப் பேசினாலும் அது உண்மையாக இருக்க வேண்டும். அது பொது நலன் சார்ந்ததாக இருக்க வேண்டும்.

நாம் சொல்லுகின்ற கருத்து பொதுமக்களுக்கானது எனக் கருதப்பட்டால், அது இன்னும் மேன்மையானது.

அதற்காக உண்மைக்குப் புறம்பானதை – நியாயப்படுத்த முடியாததைச் சொல்லுகின்ற போது அங்கு தர்மம் தவிர்க்கப்படுகிறது.

ஆம், மருத்துவர்கள் சார்ந்த விசாரணையின்போது சாவகச்சேரி நீதிமன்றத்தின் மதிப்பார்ந்த நீதிபதி நேற்றைய தினம் (16) வழங்கிய அறிவுரை இங்கு கூர்ந்து கவனிக்கப்பட வேண்டும்.

அதாவது பொதுவெளியில் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஆதாரங்களுடன் பொலிஸில் முறைப்பாடாக முன்வைக்க வேண்டும். அதைச் செய்யாதவிடத்து, சம்பந்தப்பட்டவருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்ய வேண்டும்.

இங்குதான் உண்மைக்குப் புறம்பானவற்றை நாம் முன்வைத்தால், அது உண்மையையும் தோற்கடித்து விடும்.

எனவே நீதிக்காக – உண்மைக்காக யார் குரல் கொடுப்பதாக இருந்தாலும் அவை அத்தனையும் உண்மையானதாக – நேர்மையானதாக – தர்மத்தின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டும். இல்லையேல் எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

# யாப்பில் மாற்றம் தேவையெனக்கோரி தேர்தலைக் குழப்ப கடும் பிரயத்தனம்

## சட்டத்தரணிகள் ஒன்றியம் சுட்டிக்காட்டு

அரசமைப்பில் தற்போது மாற்றங்களை மேற்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என சட்டத்தரணிகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள அரசமைப் பிற்கான 22வது திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால் 30 நாட்களிற்குள் சர்வஜனவாக்கெடுப்பொன்றை நடத்துமாறு ஜனாதிபதித் தேர்தல் ஆணையாளரை கோரவேண்டிய நிலையேற்படும் என சட்டத்தரணிகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நாடு சமாந்திரமாக இரண்டு தேசிய தேர்தல்களை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும்,ஒரு தேர்தலின் பின்னர் மற்றுமொரு தேர்தல் இடம்பெறும். இதுகுழப்பமானநிலையை ஏற்படுத்தும்.

சர்வஜனவாக்கெடுப்பை நடத்துவதற்குப் பல பில்லியன்கள் தேவைப்படும் என தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் ஒன்றியம் உள்ளூராட்சித்தேர்தலை நடத்துவதற்கு தன்னிடம் நிதியில்லை என அரசாங்கம் தெரிவித்துவருகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளது.

அத்தோடு, ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக் காலத்தின் உச்சவரம்பை குறைக்கவேண்டிய அவசியம் இல்லை,முன்மொழியப்பட்ட திருத்தம் தேவையில்லாமல் விடயங்களை குழப்பகரமானதாக்கி தேர்தல் நடைமுறைகளை சீர்குலையச்செய்யும் முயற்சியாக இருக்கலாம் என சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணிகள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலத்தை தேர்தல் நடைமுறைகளை சூழ்ச்சித்திறத்துடன் கையாளும் முயற்சி என குற்றம்சாட்டியுள்ள சட்டத்தரணிகள் ஒன்றியம் ஜனநாயக சக்திகள் இதனை எதிர்க்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம-7)

## நாட்டைக்காக்க தாய்க் கட்சிக்கு வருக

# அழைப்பு விடுத்தார் ரணில் ஏற்க மறுத்தார் சஜித்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டோர் தேசத்தைப் பாதுகாப்பதற்கு ஆதரவு வழங்கினால் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்புரிமையை மீள வழங்க தயார் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கையை ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

தேசத்தைப் பாதுகாப்பதற்காக நாங்கள் அவருக்கு ஆதரவளித்தால் ஐக்கிய தேசியக் கட்சியில் எங்களின் உறுப்புரிமையை மீள இணைத்துக் கொள்ள ஜனாதிபதி முன்வந்துள்ளார். எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, பிரசன்ன ரணவீர மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோருடன் நாங்கள் மேடையில் இருக்க விரும்பாததால் இந்த வாய்ப்பை ஏற்க நாங்கள் எவரும் தயாராக இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார் நேற்று ஊடக வியலாளர் சந்திப்பில் தெரிவித்தார். (ம-7)

# நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு சட்டமூலத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்காக 2023.12.18 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பின்னர், பல்வேறு தரப்பினர் இச்சட்டமூலத்திற்கு மேலும் திருத்தங்களை முன்மொழிந்தமையால், குறித்த சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான இடைச் செயலகத்தின் ஆலோசனைக் கலந்துரையாடல்கள் சுற்றுக்கள் நடாத்தப்பட்டு, இச்சட்டமூலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

அத்திருத்தங்களை உள்ளடக்கி அடிப்படைச் சட்டமூலத்திற்கமைய, சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும், இதற்கு முன்னர் இச்சட்டமூலத்திற்காக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வதற்கும் ஜனாதிபதி, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போடவேண்டாம்

## பொதுஜன பெரமுன கோரிக்கை

(கொழும்பு)

எந்தவொரு காரணத்திற்காகவும் ஜனாதிபதி தேர்தலை பிற்போடாது உரிய நேரத்தில் நடத்துமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்ததாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ, கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் பிரதிநிதிகள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர். (ம-7)

## ஆடிப்பிறப்பினை முன்னிட்டு

# யாழில் களைகட்டிய பனங்கட்டி விற்பனை

(யாழ்ப்பாணம்)

உலக வாழ் இந்துக்களால் அனுஸ்டிக்கப்படும் ஆடிப்பிறப்பு நன்னாளினை முன்னிட்டு ஆடிப்பிறப்புக்கான பொருட்களை கொள்வனவு செய்வதில் மக்கள் மிகவும் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இந்நிலையில் ஆடிப்பிறப்பினை முன்னிட்டு யாழ். நகர் பலசரக்கு கடை மற்றும் சந்தைப் பகுதிகளிலும் பனங்கட்டி குட்டான் உள்ளிட்ட ஆடிக்கூழுக்கு தேவையான பொருட்கொள்வனவு செய்வதில் மக்கள் அதிகம் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

யாழ். நல்லூர் திருநெல்வேலி சந்தையில் பெரிய பனங்கட்டி குட்டான் ஒன்றின் விலை 140 ரூபாக்கும் சிறிய பனங்கட்டி குட்டான் 120 ரூபாக்கும்விற்பனை செய்யப்படுகின்றது என பனங்கட்டி குட்டான் வியாபாரிகள் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிக் கூழ்குடித்து ஆடிப் பாடி மகிழ்ந்திடுவோம்!

இன்று ஆடிப்பிறப்பு. இப்பண்டிகை தமிழ் சமூகத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகையாகும். குறிப்பாக ஈழத் தமிழர்கள் இந்தப் பண்டிகையை தமது கலாசார, பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக கொண்டாடி வருகின்றனர். அன்றைய நாளில் ஆடிக்கூழும், கொழுக்கட்டையும் தான் சிறப்பு உணவுகள்.

இந்த உணவுகள் தான் ஆடிப்பிறப்பு பண்டிகை கொண்டாட்டத்தின் அடையாளங்கள். இந்த உணவுகள் ஈழத் தமிழ் மக்களின் பண்பாட்டு உணவுகள். இம்முறையும் ஆடிப் பிறப்பை ஒட்டி ஈழத் தமிழர் வீடுகளில் கூழ்காய்ச்சி, கொழுக்கட்டை அவித்து கொண்டாடி மகிழ்வர்.

சூரியன் வடதிசை நோக்கிச் செல்லும் தை தொடக்கம் ஆனி வரையுள்ள ஆறு மாத காலம் உத்தராயண காலம் எனப்படும். இது தேவர்களுக்கு ஒரு நாளின் பகல் பொழுதாகும். பின்னர் சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் காலம் ஆடி முதல் மார்கழி வரையுள்ள ஆறு மாத காலம் தட்சணாயண காலம். இது தேவர்களுக்கு இராப் பொழுதாகும். தட்சணாயணத்தின் ஆரம்ப தினம் ஆடிமாத முதலாம் நாள் ஆகும். இக்காலம் கோடைகால வெப்பம் தணிந்து குளிர்மை படிப்படியாகப் பெருகும் இயல்புடையது.

ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை என்ற பாடல்தான் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆடிப்பிறப்பு நாளில் நினைவுக்கு வரும். இந்தப் பாடலை ஈழப் புலவர்களில் ஒருவரான நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடியுள்ளார்.

ஆடிப்பிறப்புக்கு ஒரு காலத்தில் விடுமுறைகள் விடுக்கப்பட்டுள்ளன. அந்தளவு முக்கியமான நாளாக ஆடிப்பிறப்பு அமைந்துள்ளது. அதாவது தை முதல் நாளையும் ஆடி முதல் நாளையும் ஈழத்தவர்கள் கொண்டாடுகின்றனர். ஒரு ஆண்டின் தொடக்கத்தையும் அரை ஆண்டின் தொடக்கத்தையும் கொண்டாடுகின்றனர். இங்கு முதல் அரையாண்டு தேவர்களுக்குரியதென்றும் இறுதி அரையாண்டு பிதிர்களுக்கு உரியது என்றும் ஓர் ஐதீகம் இருக்கிறது.

கற்கடகம் என்பது ஆடி மாத்தின் பழைய தமிழ் பெயராகும். ஆடி முதல் நாளை தமிழர்கள் வரவேற்கும் விழாவே ஆடிப்பிறப்பு.

இப் பண்டிகையின் போது தேங்காய் சுடுதல் என்ற உணவுப் பழக்கமும் தமிழர்களிடம் காலம் காலமாக நிலவி வந்துள்ளது.

தேங்காய் நாரை முற்றிலும் உரித்து விட்டு நன்றாக உருட்டிய பின் தேங்காயின் 3 முகங்களில் ஒன்றில் மட்டும் துளையிட்டு தேங்காய் நீரை ஒரு பாத்திரத்தில் பிடித்து வைத்துக் கொள்ளவும். பாசிப்பருப்புடன், பொட்டுக்கடலை, எள்ளு, வெல்லம், சிறிதளவு உப்பிட்டு அரைத்தெடுத்து. தேங்காயின் ஒரு துவாரத்தின் வழியாக அடைத்து சிறிது தேங்காய் நீரை ஊற்றியபின் இத் துவாரத்தை மஞ்சளிட்டு அடைத்து வாதனாங் குச்சியை துவாரத்தில் சொருகி தேங்காயை தீயில் சுட்டபின் கடவுளுக்கு படைத்தபின் உடைத்து குடும்பத்துடன் சாப்பிடும் வழக்கம் தமிழ்நாட்டில் காணப்பட்டுள்ளது.

ஆடிப்பிறப்பன்று, வானவேடிக்கைகள், களியாட்ட நிகழ்வுகள், பட்டம் விடுதல் முதலிய நிகழ்வுகளில் ஈழத்தவர்கள் ஈடுபட்டதாக மூதாதையர்களின் நினைவுக்குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு சொல்லப்படுகிறது. சிறுவர்களும் முதியவர்களும் இணைந்து கூடிக் கொண்டாடி மகிழும் ஒரு நிகழ்வாக ஆடிப்பிறப்பு காணப்படுகிறது. நாவாலியூர் சோமசுந்தரப் புலவரின் ஆடிப்பிறப்புக்கு நாளை



விடுதலை என்ற பாடல் ஆடிப்பிறப்பின் கொண்டாட்டம், களியாட்டம், பண்பாட்டு முக்கியத்துவம், கலாசார செழிப்பு என்று பல்வேறு முக்கிய அம்சங்களை வெளிப்படுத்துகிறது.


பண்டிகை நாட்களில் மனதில் பெரும் மகிழச்சியோடு, உறவுகள் கூடியிருப்பது தான் மகிழச்சியையும் கொண்டாட்டத்தையும் புது தொடக்கத்தையும் தருகிறது. பண்பாட்டு அழிப்புக்களுக்கும் கலாசார நெருக்கடிகளுக்குள்ளும் தள்ளப்பட்டுள்ள ஈழத்தமிழ் இனம் ஆடிப்பிறப்பு போன்ற பாரம்பரிய பண்டிகை தினங்களை தொடர்ந்து கொண்டாடி தமது கலாசார, பண்பாட்டு தடத்தை வலுப்படுத்த வேண்டும். அதே நேரம் விடுதலையற்ற சனங்களாக, பண்பாட்டு - கலாசார அழிவுப் பொறிகள் சூழப்பட்ட சனங்களாக வாழும் ஈழத் தமிழ்கள் ஆடிப்பிறப்புக்களை அழுத்தம் நிறைந்த மனதோடுதான் கடந்து செல்கிறார்கள்.

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3171

### சனா




### மாதவன்




### மதுபாலா




### நிறோ



### கண்ணா




### தனுஸ்கா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிப்பர் வாகனம்...

கிளிநொச்சி - பூநகரி பரந்தன் வீதியில் பொலிஸாரின் சைகையை மீறி சென்ற டிப்பர் வாகனத்தின் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டதில் ஒருவர் காயமடைந்து கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் .

நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட குடமுருட்டி பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்ந்து சென்ற டிப்பர் வாகனத்தைப் பொலிஸார் சோதனையிட முற்பட்ட சமயம் பொலிஸாரின் சைகையை மீறி டிப்பர் வாகனம் வேகமாகப் பயணித்துள்ளது.

குறித்த வாகனத்தை சுமார் 13 கிலோமீற்றர் தூரம் துரத்திச் சென்ற பொலிஸார் குறித்த டிப்பர் வாகனத்தின் மீது பூநகரிப் பகுதியில் வைத்து மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் டிப்பர் வாகனத்தில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார் .

இவ்வாறு துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம் டிப்பர் வாகனத்தில் பயணித்த ஏனைய இருவர் தப்பி ஓடிய நிலையில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவத்தின்போது கிளிநொச்சியைச் சேர்ந்த 25 வயது இளைஞனே காயமடைந்து கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,100,315,316)

## இலத்திரனியல்...

தின் பின்னர் இடம்பெறாதென ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார்.

புதிய அடையாள அட்டையில் கைவிரல் அடையாளம் உள்ளடக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஜனாதிபதித்...

ஜனாதிபதித் தேர்தல் சட்டம் என்பவற்றுக்கு அமைய ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகளை முன்னெடுத்துள்ளோம். ஆரம்பக் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

இதற்கமைய ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை இந்த மாதம் இறுதிப் பகுதியில் அறிவிப்போம். இம்முறை 1 கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதற்கு தடையேதும் கிடையாது. கடந்த காலங்களைக் காட்டிலும் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் குறித்து மக்கள் எதிர்பார்ப்புடன் உள்ளார்கள். ஆகவே சுதந்திரமாகவும், நீதியாகவும் தேர்தலை நடத்த அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து எழுப்பப்படும் மாறுபட்ட கருத்துக்கள் குறித்து மக்களைத் தெளிவுபடுத்தும் பொறுப்பு தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு உண்டு.

அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்கெடுப்பு திகதி,வேட்பு மனுக்களை கையேற்கும் திகதி, தேர்தல் அறிவித்தலை பிரகடனப்படுத்தும் திகதி ஆகியவற்றைத் தீர்மானிக்கும் போது பல விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும். வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளுக்கு போதுமான கால அவகாசம் வழங்குதல், வாக்கெடுப்புடன் தொடர்புடைய சட்டரீதியிலான கடமைகளுக்கு போதுமான கால அவகாசம்வழங்குவதைப் போன்று அனைத்து வாக்காளர்களும் வாக்களிப்பதற்குப் பொருத்தமான சூழலைக் கொண்ட ஒரு தினத்தை தீர்மானித்தல் குறித்து கவனத்திற் கொள்ளப்படும்.

ஏதேனும் காரணத்தினால் வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பை இரத்துச் செய்ய நேரிட்டால் ஒக்ரோபர் 16 ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் வாக்கெடுப்பை நடத்துவதற்கு குறைந்தபட்சம் 14 நாட்கள் தேவைப்படும்.

வேட்புமனுக்களை பொறுப்பேற்கும் காலப்பகுதி காலை 09 மணிமுதல் 11 மணிவரை என்று இரண்டு மணித்தியாலங்கள் வரையறுக்கப்பட்டிருப்பதால் பெயர் குறித்த வேட்புமனுக்களை கையேற்கும்போது பாரம்பரியமாக கடைப்பிடிக்கப்படும் மத சம்பிரதாயங்களையும் கருத்திற் கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

## மின் கட்டணம்...

கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வரிகளை...

ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதற்காக, தற்போதைய சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டு, இவ்வாறு வரி ஏய்ப்பு செய்பவர்களிடம் இருந்து வரியை வசூலிக்கும் தனித்துவமான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏதேனும் ஒரு வழியில் வரி செலுத்துவதில் சிரமம் இருந்தால், அதுகுறித்து மேல்முறையீடு செய்யவும், நீதிமன்றத்தை நாடவும் அவர்களுக்கு உரிமை உண்டு. அவ்வாறு சிலரின் நீதிமன்ற நடவடிக்கைகள் 30 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருவதால், நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவடைவதற்குள் அவர்கள் இறந்தும் விடுகின்றனர்.

மேலும், மாதம் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் நிகர வருமானம் உள்ளவர் மட்டுமே வரி செலுத்த வேண்டும் என்றும், வேறு இடத்தில் வரி செலுத்தியிருந்தால், மீண்டும் வரி செலுத்த வேண்டிய தில்லை என்றும் அவர் கூறினார்.

இதுகுறித்து பிராந்திய அலுவலகத்திற்கு எழுத்துமூலமாக அறிவிக்குமாறும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

வரி ஏய்ப்பு செய்பவர்களைப் பிடிப்பதற்கு வலுவான வலை போடப்பட்டுள்ளதாகவும், தற்போதுள்ள சட்டங்களை தகவல் தொழில்நுட்பத்துடன் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவர்...

யாழ்.சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் இராம நாதன் அர்ச்சுனாவை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத் திய நடவடிக்கைகளில் ஈடுபட சாவ கச்சேரி நீதிமன்றம் தடை விதித் துள்ளதோடு, அவரை 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தலா 5 சரீரப் பிணை களில் விடுவித்துள்ளது.

“தொலைபேசியில் அச்சுறுத் தியமை”, “பேசித் தொந்தரவு செய் தமை” என வைத்தியர்களால் தனித் தனியாக ஐந்து வழக்குகள் மருத்துவர் இ.அர்ச்சுனாவுக்கு எதிராகத் தொடுக் கப்பட்டிருந்தன.

இந்நிலையில் குறித்த வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் அ. யூட்சன் முன்னிலையில் நேற்று (16) விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன் போது வழக்குத் தொடுநர்கள் சார்பாக கு.குரு பரன், திருக்குமரன் உள்ளிட்ட நான்கு சட்டத்தரணிகள் ஆஜராகி இருந்தனர்.

எதிராளி சார்பாக சட்டத்தரணிகள் எவரும் ஆஜரா கவில்லை.

மருத்துவர் அர்ச்சுனாவே தன் பக்க நியாயங்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இருபக்க வாதங்களையும் செவிமடுத்த நீதவான்,

மருத்துவர்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களுடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் அளிக்குமாறு மருத்துவர் அர்ச்சுனாவுக்கு உத்தரவிட்ட தோடு ஒவ்வொரு வழக்கிலிருந்தும் தலா 75 ஆயிரம் ரூபாய் சரீரப் பிணையில் அவரை விடுவித்தார்.

எதிராளி ஆதாரங்களுடன் வாக்குமூலம் வழங்கா விட்டால் அவர் மீது வழக்கு தொட ரலாம் எனவும் பொலிஸாருக்கு நீத வான் அறிவுறுத்தினர்.

மேலும், சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையின் சுமூகமான செயற் பாட்டிற்காக, முன்னாள் பதில் மருத் துவ அத்தியட்சகர் அர்ச்சுனாவை வைத்தியசாலையின் நிர்வாக செய ல்பாடுகளில் தலையிடவும், வைத் தியசாலைக்குள் நுழையவும் தடை உத்தரவு பிறப்பித்தார்.

மேலும் நீதிமன்ற வழக்கு விசா ரணைகள் தொடர்பில் முகநூல் நேர லையோ, பதிவுகள் ஊடாக கருத்து தெரிவிக்ககூடாது உள்ளிட்ட நிபந் தனைகளையும் மன்று விதித்தது.

இருந்தபோதிலும் வைத்திய சாலையின் விடுதிக்குள் தங்குவதற்கு மட்டும் அனுமதி வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து வழக்கு விசா ரணை இம்மாதம் 31ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது. (ம-7,30)


UNICORN FACILITATORS (PVT) LTD.

ஜெர்மன்(German) பல்கலைக்கழகங்களில் ஆங்கிலம் மூலம் உயர் கல்வி... Intake in October. வருடத்திற்கு ஒரு முறை மட்டும். வாய்ப்பை தவற விடாதீர்கள்.

Unicorn Facilitators Nallur Jaffna

077 345 0738
076 697 3176
077 768 7821

(166)

வெளிநாட்டு நிறுவனங்களின் யாழ்.முகவர்
Denmark - Doctors / Nurses
Australia / Canada - permanent Skilled Migration.
America (USA) Green Card for Nurses.

வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் இயங்கும் பிரபல உணவகம் ஒன்றிற்கு சமையலாளர், உணவு பரிமாறுவோர் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

076 801 2936
077 777 3705

(1496)

வீடு வாடகைக்கு

இலக்கம் 52, பலாலி வீதி, யாழ்ப்பாணம் இலுப்பையடி சந்திக்கு அருகாமை முன்னாள் ஐ.சி.ஆர் சி (ICRC) இயங்கிய சகல வசதியும் கொண்ட மாடி வீடு.
நிறுவனங்களுக்கு முன்னுரிமை.
தரகர் தேவையில்லை.
பார்வையிடும் நேரம்:- மாலை 4.00 - 6.00
தொடர்பு:077 400 3672/ 021 222 8848

(1491)

முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தகைமைகள்


- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- ✓ 18 – 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (BIO DATA) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Whatsapp:077 756 3781
Email:jenyjude77@yahoo.com

(1487)


## மரண அறிவித்தல்



தோற்றம் 24 - 03 - 1949

மறைவு 15 - 07 - 2024

### தமிழறிஞர் கலாபூஷணம் K.V.குணசேகரம்

(முன்னாள் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய அதிபர் மற்றும் முன்னாள் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர்)

வெள்ளெருவைப் பிள்ளையார், கோப்பாய் மத்தி, கோப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தமிழறிஞர் கலாபூஷணம் K.V.குணசேகரம் அவர்கள் நேற்று முன்தினம் (15.07.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் திரவியம் மற்றும் - வைத்திலிங்கம் சீவரத்தினம் தம்பதியரின் மகனும் தம்பு - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராதேவியின் பாசமிகு கணவரும் தர்மேந்திரா (மாவட்ட செயலகம்) அவர்களின் தாய் மாமனும் ராஜசிறி(பிரதேச செயலகம், பூநகரி) அவர்களின் சிறிய தந்தையும் விகாஷ், காசினி, மிகேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ராஜேஸ்வரி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற விக்கினேஸ்வரி மற்றும் ராஜசிலோசனா (கனடா), அனுசியா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி (சிங்கப்பூர்) மற்றும் கார்த்திகேயன், காலஞ்சென்ற யோகாம்பிகை மற்றும் நற்குணராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (17.07.2024) இன்று புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இல்லத்தில் இடம்பெற்று கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல்: தர்மேந்திரா
077 6660 342

(C-808)


பராமரிப்பாளர் தேவை

- யாழ். நகரிலுள்ள வீடொன்றில் வயதான பெண்ணை பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை.
- யாழ் நகரிலுள்ள வீட்டை சுத்திகரிப்பதற்கு சுத்திகரிப்பாளர் தேவை.

தொடர்பு:
077 773 0567

(1490)

A/L Technology Class
Personal Class
Group Class
தொடர்பு:
076 649 1395

(1494)

வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 17 37 684

(157)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0811)

Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna.

(C-0811)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241

(C-0811)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org